අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்விஅமைச்சு
Ministry of Education

"ඉසුරුපාය"
බත්තරමුල්ල.
'இசுருபாயா"
gj;juKy;y.
"Isurupaya"
Battaramulla.

දුරකථන/தொலைபேசிஇல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister: 2784832, Fax: 2784825

ලේකම් / செயலாளர் / Secretary: 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, Fax: 2784846

ඊ-මේල් / ஈ-மெயில் / E-mail : isurupaya@moe.gov.lk


ඔබේ අංකය / உமது இல. / Your No. ....................

මගේ අංකය / எமது இல. / My No. ED/01/21/03/06

දිනය / திகதி / Date 2017.07.21

சுற்று நிருப இல.30/2017

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல பிரிவெனாதிபதிகள் / அதிபர்கள் ஆகியோருக்கு,

## <u>டெங்கு நோயைக் கட்டுப்படுத்தல் தொடர்பான விஷேட நிகழ்ச்சித்திட்டம்.</u>

மேற்படி விடயம் தொடர்பாக இதற்கு முன் வெளியிடப்பட்டிருந்த சுற்றுநிருப இல. 2010/22 மற்றும் 2017.06.01 திகதியிடப்பட்ட கடிதங்களுக்கு மேலதிகமானதாகும்.

நாடு முழுவதும் பரவிக்கொண்டிருக்கும் டெங்கு நோய் நிலைமை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டிருக்கும் அதேவேளை அதற்காக தற்போதைய நிலையில் 100,000 பேர் அளவில் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 200 ற்கும் அதிகமானோர் பழியாகி உள்ளனர். இவர்களுள் 30% பாடசாலை செல்லும் வயதில் உள்ளவர்கள் என்பது கவலைக்குரிய விடயமாகும். அதேபோன்று டெங்கு நுளம்புகள் செயற்படும் கால எல்லைக்குள் அதிகமான நேரத்தை பிள்ளைகள் செலவிடுவது பாடசாலைச் சூழலிலாகும். அதனால் பாடசாலைச் சூழலைத் தூய்மையாகவும், நுளம்புகளற்ற விதத்திலும் பராமரித்தல் போன்றே நுளம்புகள் கடிக்கக்கூடிய சந்தர்ப்பங்பளைக் குறைக்க நடவடிக்கை எடுத்தலும் முக்கியமானதாகும்.

அது தொடர்பில் உங்கள் விஷேட கவனத்தைச் செலுத்த வேண்டும் என்பதுடன் தற்போது அமுலில் உள்ள வேலைத்திட்டங்களுக்கு மேலதிகமாக கீழுள்ள செயற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். கல்வியைப் பெற வேண்டுமெனின் டெங்கு பரவலினால் பிள்ளையின் உயிர் பாதுகாக்கப்பட வேண்டும். உயர்ந்த கல்வியை வழங்கி அறிவுபூர்வமான சமூகத்தைக் கட்டியெழுப்ப உழைக்கின்ற நீங்கள் முதலாவதாக உங்கள் பாடசாலையைப் பாதுகாப்பான சூழலாக மாற்ற நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அதன்படி 2017/07/28(வெள்ளி) / 29(சனி) / 30(ஞாயிறு) ஆகிய மூன்று தினங்களுக்குள் சகல பாடசாலைகளினதும் மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் அயலவர்கள் உள்ளிட்ட பாடசாலைச் சமூகத்தை இணைத்துக்கொண்டு பாடசாலை மற்றும் அயற் சூழலை தூய்மைப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்து அது தொடர்பாக சம்பவத் திரட்டில் குறிப்பெழுதுதல் வேண்டும்.

வெள்ளிக்கிழமை காலை கற்பித்தற் செயற்பாடுகளை மேற்கொள்ளாது டெங்கு ஒழிப்புக்காக பாடசாலைச் சூழலைத் தூய்மைப்படுத்த நடவடிக்கை எடுப்பதுடன் அதற்காக வெள்ளியன்று பாடசாலைக்கு வரும்போது சிரமதானத்துக்குப் பொருத்தமான உடைகளுடன் வருமாறு மாணவர்களுக்கு அறிவித்தல் வேண்டும்.

சனி மற்றும் ஞாயிறு தினங்களில் இந்த சிரமதானப் பணியைச் செய்ய வேண்டும் என்பதுடன் புகை அடித்தல் மற்றும் வேறு தேவையான ஆலோசனைகளுக்காக பிரதேசத்தின் சுகாதார வைத்திய அதிகாரிகளின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளல் அதிபர்களின் கடமையாகும். பாடசாலைச் சூழலில் நிலவுகின்ற டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய அபாயகரமான இடங்களை முகாமைத்துவம் செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

- பயன்பாட்டில் இல்லாத மலசலகூடத் தொகுதிகளை அகற்றுதல்.
- உடைந்துள்ள பொருட்களை பொருத்தமானவாறு முகாமைத்துவப்படுத்தல்.
- பாதியளவு முடிக்கப்பட்டுள்ள கொங்கிறீட்டுக் கூரைகளில் நீர் தேங்கி நிற்காதவாறு திருத்துதல்.
- மலசலகூடங்களை அண்மித்த நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களைச் சீர் செய்தல்.
- பாடசாலைச் சூழலிலுள்ள நீர் தேங்கி நிற்கும் இடங்களை உரிய முறையில் முகாமைத்துவப்படுத்தல்.
- மழைப் பீலிகளைச் சுத்தம் செய்வதுடன் டெங்கு அபாயமுள்ள மழைப்பீலிகளை அகற்றுதல்.

மேலும், பாடசாலையின் கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பாக முறையான வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்தல் மற்றும் நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களை தொடர்ச்சியாக மேற்பார்வை செய்துகொண்டு அவ்விடங்களை இனிமேலும் நுளம்புகள் பெருகாத விதத்தில் அமைத்துக்கொள்ள, பொருத்தமான வேலைத்திட்டமொன்றை பாடசாலை அதிபர்களினால் தயாரித்துக் கொள்ளல் வேண்டும்.

டெங்கு நுளம்புகளுடன் கூடிய பாடசாலைச் சூழல் பாடசாலை மாணவர்களுக்குப் போன்றே சமூகத்திற்கும் பாதிப்பினை ஏற்படுத்தும். அதனால் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு தயவாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

சுனில் ஹெட்டிஆரச்சி
கல்விச் செயலாளர்.

பிரதிகள் :-

1. செயலாளர், ஜனாதிபதி செயலகம் - தகவலுக்காக
2. செயலாளர், பிரமதர் அலுவலகம் - தகவலுக்காக
3. செயலாளர், சுகாதார, போஷணை மற்றும் சுதேஷ வைத்திய அமைச்சு –தேவையான ஒத்துழைப்பினை பெற்றுக்கொடுப்பதற்காக